திருப்பூர் அருகே பல்லடம் மாதப்பூரில் 25–ந்தேதி பா.ஜ.க. பொதுக்கூட்டம்: பிரதமர் மோடி பேசுகிறார்

திருப்பூர், பிப்.4–

திருப்பூரை அடுத்த பல்லடம் மாதப்பூரில் வருகிற 25–ந் தேதி நடக்கும் பாரதீய ஜனதா பொதுக்கூட்டத்தில் பிரதமர் மோடி பங்கேற்று பேசுகிறார் என்று பாரதீய ஜனதா மாநில பொதுச்செயலாளர் ஏ.பி.முருகானந்தம் தெரிவித்துள்ளார்.

பாரதீய ஜனதா மாநில பொதுச்செயலாளர் முருகானந்தம் நேற்று திருப்பூரில் நிருபர்களிடம் கூறியதாவது:–

தமிழக பாரதீய ஜனதா தலைவர் அண்ணாமலை 180 சட்டமன்ற தொகுதிகளில் நடைபயணம் மேற்கொண்டுள்ளார். நடைபயணத்தின் பிரமாண்டமான நிறைவு விழா பொதுக்கூட்டம், திருப்பூர் மாவட்டம் பல்லடம் மாதப்பூர் பகுதியில் நடைபெறுகிறது. இந்த கூட்டத்தில் பிரதமர் மோடி கலந்து கொண்டு பேசுகிறார். இதுவரை எந்த அரசியல் கட்சியும் இதுபோன்ற பிரமாண்ட பொதுக்கூட்டத்தை நடத்தியது கிடையாது என்ற அளவுக்கு ஏற்பாடுகள் நடக்கின்றன.

இந்த பிரமாண்ட பொதுக்கூட்டம் தமிழகத்தில் மிகப்பெரிய அரசியல் மாற்றத்தை ஏற்படுத்தும். 10 லட்சம் பேர் கட்சியினர், மேலும் 3 லட்சம் பொதுமக்கள் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கிறோம். 400 ஏக்கரில் பொதுக்கூட்ட மைதானம் அமைக்கப்படுகிறது. 600 ஏக்கரில் வாகன நிறுத்துமிடம், மக்கள் வந்து செல்வதற்காக 300 ஏக்கர் என மொத்தம் 1,300 ஏக்கர் தேர்வு செய்யப்பட்டு பணிகள் நடக்கிறது. தமிழகம் மட்டுமின்றி இந்தியாவே திரும்பி பார்க்கும் நிகழ்வாக, 'என் மண், என் மக்கள்' நடைபயணத்தின் நிறைவு விழா பொதுக்கூட்டம் இருக்கும்.

மாநில தலைவர் அண்ணாமலையின் 'என் மண், என் மக்கள்' நடைபயணம் வருகிற 24–ந் தேதி மாலை திருப்பூர் மாநகரில் நடக்கிறது. இதில் தேசிய தலைவர்கள், முக்கிய தலைவர்கள் பங்கேற்பார்கள். தமிழகம் பிரதமர் மோடிக்கு பிடித்தமான மாநிலம். 25–ந் தேதி நடக்கும் பொதுக்கூட்டம், பொருளாதார ரீதியாக, சமூக ரீதியாக, அரசியல் ரீதியாக, அமைப்பு ரீதியாக தமிழகத்தில் மாற்றத்தை ஏற்படுத்தும். தொழில் அமைப்புகளை சந்தித்து முக்கிய தேவைகள் தேர்தல் வாக்குறுதியாக இடம்பெற வாய்ப்புள்ளது.

பெண்களின் ஆதரவு பாரதீய ஜனதாவுக்கு அதிகம் உள்ளது. தி.மு.க.வை நேரடியாக கேள்வி கேட்கும் முதன்மை கட்சியாக பாரதீய ஜனதா உள்ளது. தலைவர் அண்ணாமலை தெரிவிக்கும் குற்றச்சாட்டுகளுக்கு இதுவரை பதில் இல்லை. பல்வேறு அமைச்சர்கள் சிறை சென்றுள்ளனர்.

தமிழகத்தில் முழு அரசியல் நகர்வும் அண்ணாமலையை நோக்கியே உள்ளது. நடிகர் விஜய் அரசியலுக்கு வருவதை வரவேற்கிறோம். தன்னலமற்றவர்கள் யாராக இருந்தாலும் மக்களுக்கு சேவை செய்வதை வரவேற்கிறோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

பேட்டியின்போது பாரதீய ஜனதா திருப்பூர் வடக்கு மாவட்ட தலைவர் செந்தில்வேல், துணைத்தலைவர் வக்கீல் சி.பி.சுப்பிரமணியம், பொதுச்செயலாளர்கள் சீனிவாசன், பாலசுப்பிரமணி, பொருளாளர் நடராஜ் ஆகியோர் உடனிருந்தனர்.

சென்னையில் மேயர் ராதாகிருஷ்ணன் ஹாக்கி அரங்கம், நேரு விளையாட்டு அரங்கம் உள்ளிட்ட 4 அரங்கங்கள் ரூ.25 கோடியில் மேம்பாடு: அரசாணை வெளியீடு

சென்னை, பிப்.4–

சென்னை மாநகரின் விளையாட்டு உள்கட்டமைப்புகளை சர்வதேசத்தரத்தில் மேம்படுத்திட ரூ.25 கோடி நிதி வழங்கி அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து அரசு வெளியிட்டுள்ள ஒரு செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:– 2023 – 2024–ம் ஆண்டிற்கான இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை மானியக் கோரிக்கையின்போது, அமைச்சர் உதயநிதி, சென்னையில் உள்ள ஐந்து முக்கிய விளையாட்டரங்கங்களில் விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் ரூ.25 கோடி மதிப்பீட்டில் மறுசீரமைத்து மேம்படுத்தப்படும் என அறிவித்தார். அந்த அறிவிப்புகளைச் செயல்படுத்தும் வகையில் சென்னை மாநகரில் உள்ள 25 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமையான விளையாட்டு உட்கட்டமைப்புகளைச் சர்வதேச தரத்திற்கு உயர்த்தி மேம்படுத்திட மேயர் ராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டு அரங்கம் ரூ.11 கோடியே 34 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கம் 5 கோடியே 71 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், ஜவர்ஹர்லால் நேரு



உள் விளையாட்டு அரங்கம் 2 கோடியே 35 லட்சம் மதிப்பீட்டிலும், வேளச்சேரி நீச்சல்குளம் வளாகம் 4 கோடியே 72 லட்சம் மதிப்பீட்டிலும் நுங்கம்பாக்கம் டென்னிஸ் விளையாட்டு அரங்கம் 88 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் மேம்படுத்தப்பட மொத்தம் 25 கோடி ரூபாய் நிதி வழங்கி அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இது இந்திய விளையாட்டுத்துறையின் தலைமையகமாக தமிழ்நாட்டை உருவாக்கிட முனைந்திடும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உயர்ந்த நோக்கத்திற்கு ஒரு சீரிய சான்றாகும்.

இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

இந்தியப் பொருளாதாரம் இன்னும் 7 ஆண்டு சராசரியாக 6.7 சதவீத வளர்ச்சி அடையும்

'கிரிசில்' பொருளாதார அமைப்பு தகவல்

டெல்லி, பிப். 04–

இந்தியாவின் பொருளாதாரம் 2031 வரை சராசரியாக 6.7 சதவீத வளர்ச்சி அடையும் என்று உலக பொருளாதார நிலையை கணிக்கும் கிரிசில் (CRISIL) அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்தியா இப்போது உலகின் 5வது பெரிய பொருளாதாரமாக உள்ளது. 2027ல் இந்தியா 5 டிரில்லியன் டாலர் பொருளாதாரத்துடன் 3வது பெரிய பொருளாதாரமாக மாறும் என்றும், 2031ல் இந்தியாவின் பொருளாதாரம் 7 டிரில்லியன் டாலராக வளரும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், 2024 முதல் 2031 வரை, ஆண்டுக்கு சராசரியாக 6.7 சதவீதம் என்ற அளவில் வளர்ச்சி காணப்படும் என கிரீஸில் என்ற உலக பொருளாதார கணிப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

கவனமாக கையாள வேண்டும்

அரசாங்கத்தின் மூலதன முதலீடு ஒரு முக்கிய காரணியாக இருக்கும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. கொரோனா பொது முடக்கம் காரணமாக உலகப் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது. ஆனால் இந்த சரிவில் இருந்து இந்தியா விரைவில் மீண்டது.

ரஷ்யாஉக்ரைன் போர், விநியோகச் சங்கிலி நெருக்கடி உள்ளிட்ட பிரச்னைகளால் சர்வதேச பொருளாதார மந்தநிலை காணப்பட்டது. இருப்பினும், மற்ற நாடுகளுடன் ஒப்பிடுகையில் இந்தியாவின் பொருளாதாரம் மேம்பட்டு வருவதாக சர்வதேச நாணய நிதியம் உள்ளிட்ட சர்வதேச அமைப்புகள் தெரிவித்துள்ளன.

இந்நிலையில், காசா மீதான இஸ்ரேலின் தாக்குதல் தொடர்வதால், கச்சா எண்ணெய் மற்றும் சரக்கு போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. இந்த சூழ்நிலையை இந்தியா கவனமாக கையாள வேண்டும் என்றும் கிரிசில் என்ற பொருளாதார கணிப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

ஐகோர்ட் உத்தரவைத் தொடர்ந்து அரசு அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை

சென்னை நகர் பகுதிகளில் பயணிகளை ஏற்ற, இறக்க அனுமதி கேட்டு 'ஆம்னி' பஸ் உரிமையாளர்கள் கோரிக்கை

சென்னை, பிப்.4–

சென்னை ஐகோர்ட் உத்தரவை தொடர்ந்து அரசு அதிகாரிகளுடன் ஆம்னி பஸ் உரிமையாளர்கள் பேச்சுவார்த்தை நேற்று நடந்தது. இதில் சென்னை நகர் பகுதிகளில் பயணிகளை ஏற்ற, இறக்க அனுமதி கேட்டு ஆம்னி பஸ் உரிமையாளர்கள் வலியுறுத்தினர்.

சென்னை கோயம்பேட்டில் இருந்து இயக்கப்பட்டு வந்த வெளியூர் பஸ்கள், அரசின் உத்தரவை தொடர்ந்து கிளாம்பாக்கத்தில் இருந்து இயக்கப்பட்டு வருகின்றன. தனியார் ஆம்னி பஸ்களும் கிளாம்பாக்கத்தில் இருந்தே புறப்பட வேண்டும் என்று அரசு உத்தரவிட்டுள்ளது.

இதையடுத்து சென்னை மாநகருக்குள் ஆம்னி பஸ்களை இயக்க அனுமதி கோரி ஆம்னி பஸ் உரிமையாளர்கள் சங்கத்தினர் ஐகோர்ட்டில் முறையிட்டனர்.

இந்த விவகாரம் தொடர்பாக ஆம்னி பஸ் உரிமையாளர்களும், அரசு அதிகாரிகளும் கலந்துபேசி உரிய முடிவுகளை மேற்கொள்ள ஐகோர்ட் அறிவுறுத்தியது. அதன்படி கிளாம்பாக்கம் பஸ் நிலையத்தில் இருந்து ஆம்னி பஸ்கள் முழுமையாக இயக்குவது குறித்த ஆலோசனை கூட்டம், சென்னை எழும்பூரில் நேற்று நடந்தது. சென்னை பெருநகர வளர்ச்சி குழும உறுப்பினர் செயலாளர் அன்சுல் மிஸ்ரா, போக்குவரத்து துறை இயக்குனர் சண்முகசுந்தரம் ஆகியோர் தலைமை தாங்கினர். இந்த கூட்டத்தில் ஆம்னி பஸ் உரிமையாளர்கள் சங்க நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

இந்த கூட்டத்தில், சென்னை மாநகர பகுதிக்குள் ஆம்னி பஸ்கள் இயக்க அனுமதிவேண்டும். நகர் பகுதிகள் வழியாக கிளாம்பாக்கத்துக்கு சென்று பயணிகளை ஏற்றிக்கொள்கிறோம். அந்தவகையில் நகரில் பயணிகளை ஏற்ற, இறக்க அனுமதி அளிக்கவேண்டும். அது அனைவருக்குமே பயனளிக்கும்.

அதேபோல கோயம்பேட்டில் உள்ளது போல கிளாம்பாக்கத்தில் தரைத்தளத்தில் 100க்கும் மேற்பட்ட அலுவலகங்கள் வழங்கவேண்டும். ஆம்னி பஸ்களுக்கு உரிய நடைமேடைகள் ஊர் வாரியாக ஒதுக்கப்பட வேண்டும், என்று ஆம்னி பஸ் உரிமையாளர்கள் கோரிக்கை விடுத்து வலியுறுத்தினர்.

இந்த கோரிக்கைகள் அரசின் கவனத்துக்கு கொண்டு சென்று நடவடிக்கை எடுக்கப்படுவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதுகுறித்து அனைத்து ஆம்னி பஸ்கள் உரிமையாளர்கள் சங்க தலைவர் அன்பழகன் கூறியதாவது:–

ஆம்னி பஸ்களுக்கு இந்தியா முழுமைக்குமான 'பெர்மிட்டு'களை நாங்கள் வாங்கியிருக்கிறோம். ஆனால் சென்னை நகருக்குள் ஆம்னி பஸ்கள் இயக்கக்கூடாது. கிளாம்பாக்கத்தில் இருந்து மட்டுமே இயக்க வேண்டும் என்பதை எப்படி ஏற்க முடியும்?.

அரசின்திட்டத்தை எதிர்க்கவில்லை. நாங்கள் கிளாம்பாக்கம் வருகிறோம். ஆனால் காலஅவகாசம் கேட்கிறோம். அதேவேளை நகர் பகுதிகளில் பயணிகளை ஏற்ற, இறக்க அனுமதி வேண்டும். அதை அரசு தயவுகூர்ந்து செய்துதர வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

ஆம்னி பஸ் உரிமையாளர்கள் தொடர்ந்த வழக்கின் அடுத்தகட்ட விசாரணை ஐகோர்ட்டில் வருகிற 7ந் தேதி நடைபெறுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க விசா பெற போலி பட்டப்படிப்புச் சான்றிதழ்கள்: கேரளா பெண் கைது

சென்னை, பிப். 4–

அமெரிக்க தூதரகத்தில் விசா பெற பட்டப்படிப்பு சான்றிதழ்களை போலியாக தயார் செய்து கொடுத்த கேரளாவை சேர்ந்த பெண்ணை போலீஸார் கைது செய்தனர்.சென்னை அமெரிக்க தூதரக பாதுகாப்பு அதிகாரி அளித்த புகாரில், கேரளாவைச் சேர்ந்த அமல் ஷாஜி என்பவர் அமெரிக்கா செல்ல மாணவர் எப்1 விசா கேட்டு விண்ணப்பித்தார். அதன் பேரில் ஜனவரி 30ம் தேதி அமெரிக்க தூதரகத்துக்கு நேர்முகத் தேர்வுக்கு வந்தவரின் ஆவணங்களை சரிபார்த்தபோது மேற்படி அமல் ஷாஜி தாக்கல் செய்த ஆவணங்களான சென்னை பல்கலைக்கழக பிசிஏ பட்டப்படிப்பு சான்றிதழ்கள் போலியாக இருந்தது தெரியவந்தது.

அந்த சான்றிதழ்களை கேரளா மாநிலம் எர்ணாகுளத்தில் உள்ள ஆர்ஐஎஸ்எஸ் ராயல் அகாடமியில் தயார் செய்து கொடுத்ததாக அமல் ஷாஜி தெரிவித்ததார். எனவே போலியான சான்றிதழ்களை தயார் செய்து கொடுத்த நபர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு கூறியிருந்தார். அதன் பேரில் சென்னை பெருநகர காவல், மத்திய குற்றப்பிரிவு, மோசடி புலனாய்வு பிரிவில் வழக்குப்பதிவு செய்து விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.மேற்படி அமல் ஷாஜி என்பவரை விசாரித்ததில் கேரள மாநிலம், எர்ணாகுளத்தில் உள்ள ஆர்ஐஎஸ்எஸ் ராயல் அகாடமி என்ற நிறுவனத்தை நடத்தி வரும் பெண் ஷாகினா மோல் என்பவர் மேற்படி சான்றிதழ்களை தயார் செய்து கொடுத்ததாக புகாரில் தெரிவித்தார்.

அதன்பேரில் மேற்படி பெண் மீது விரைந்து நடவடிக்கை



எடுக்க சென்னை பெருநகர காவல் ஆணையர் சந்தீப் ராய் ரத்தோர் உத்தரவின் பேரிலும், மத்திய குற்றப்பிரிவு அதிகாரி, செந்தில்குமாரி, அறிவுரையின் பேரிலும், மத்திய குற்றப்பிரிவு காவல் துணை ஆணையர், என்.எஸ்.நிஷா, மேற்பார்வையில் மத்திய குற்றப்பிரிவு மோசடி புலனாய்வு பிரிவு காவல் ஆய்வாளர் பூமாறன் தலைமையிலான தனிப்படையினர் கேரளா மாநிலம் எர்ணாகுளத்திற்கு சென்று ஷாகினா மோல்வை (36) கைது செய்தனர்.

போலீஸாரின் விசாரணையில் கைது செய்யப்பட்ட ஷாகினா மோல் எம்.பி.ஏ படித்துள்ளார். இவர் குறுகிய காலத்தில் பணம் சம்பாதிக்கும் நோக்கில் சென்னை பல்கலைகழகம், அண்ணாமலை பல்கலைகழகம், கோட்டயம் மகாத்மா காந்தி பல்கலைகழகம், கேரளா அரசு பள்ளி சான்றிதழ்கள் மற்றும் பல கல்வி நிறுவனங்கள் வழங்கியது போன்று போலி சான்றிதழ்களை தயார் செய்து கொடுத்து வந்துள்ளார்.

அப்போது அமல் ஷாஜி என்பவருக்கு சென்னை பல்கலைக்கத்தில் பிசிஏ படித்ததாக போலியாக பட்டப்படிப்பு சான்றிதழ், மதிப்பெண் பட்டியல் ஆகியவற்றை ரூ.60 ஆயிரம் பெற்றுக்கொண்டு தயார் செய்து கொடுத்துள்ளது தெரியவந்தது.

அவரிடமிருந்து போலியான சான்றிதழ்கள் தயார் செய்ய பயன்படுத்திய கம்ப்யூட்டர்கள், 5 மொபைல் போன்கள், பிரிண்டர்கள் மற்றும் போலி கல்வி சான்றிதழ்கள் கைப்பற்றப்பட்டது. கைது செய்யப்பட்ட ஷாகினா மோல் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டு நீதிபதி உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.



அண்ணாவின் 55 வது நினைவு நாளையொட்டி தாம்பரம் செல்வ விநாயகர், கோதண்டராமர் திருக்கோயில் நடைபெற்ற பொது விருந்தில் தொழிலாளர் நலன் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் கலந்து கொண்டு, பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார். தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ். ஆர். ராஜா, தாம்பரம் மாநகராட்சி மண்டல குழு தலைவர் டி. காமராஜ், செங்கல்பட்டு மாவட்ட அறநிலை துறை உதவி ஆணையர் பொ.இலஷ்மி காந்தன் பாரதிதாசன், ஆணையர் அலுவலக ஆய்வாளர் வணிதா நாகேஸ்வரன், திருக்கழுக்குன்றம் வேதகிரீஸ்வரர் திருக்கோயில் செயல் அலுவலர் அ. பிரியா, தாம்பரம் சரக ஆய்வாளர் எ. பி. வெங்கடேசன், கணக்கர்கள் எஸ். மோகன்ராஜ், சம்பத், எழுத்தர்கள் தாம்பரம் இரா. ரமேஷ், குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தி.மு.க. கூட்டணியில் மார்க்சிஸ்ட், கம்யூனிஸ்ட்...

(1–ம் பக்கத் தொடர்ச்சி)

கூறப்படுகிறது.

கடந்த 2019 மக்களவைத் தேர்தலில் திமுக கூட்டணியில் இருந்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு திருப்பூர் மற்றும் நாகப்பட்டினம் (தனி) தொகுதிகள் ஒதுக்கப்பட்டன. அந்த இரண்டு தொகுதிகளிலும் இந்திய கம்யூனிஸ்ட் வெற்றி பெற்றது.

திமுகவுடனான தொகுதி பங்கீடுபேச்சுவார்த்தை குறித்து கே.சுப்பராயன் செய்தியாளர்களிடம் கூறும்போது, "திமுகவுடனான தொகுதிபங்கீடு பேச்சுவார்த்தை தொடக்கம் மிகவும் நன்றாக இருந்தது. கடந்த முறையைவிட கூடுதல் தொகுதிகளை கேட்டு பட்டியலை கொடுத்திருக்கிறோம். பேச்சுவார்த்தை இன்னும் முடிவுக்கு வரவில்லை. முதல்வர் சென்னை திரும்பிய பிறகு இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தை நடைபெறும்" என்றார்.

வி.சி.க.வுடன் 12–ந் தேதி பேச்சுவார்த்தை

தி.மு.க. – ம.தி.மு.க. இடையேயான தொகுதி பங்கீடு குறித்த முதற்கட்ட பேச்சுவார்த்தை அண்ணா அறிவாலயத்தில் இன்று நடைபெற்றது.

இதைத் தொடர்ந்து அமைச்சர் ஐ.பெரியசாமி செய்தியாளர்களை சந்தித்துப் பேசினார்.

அப்போது அவர், தொகுதி பங்கீடு தொடர்பாக விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் ஆகிய கட்சிகளுடன் வரும் 12ந்தேதி தி.மு.க. பேச்சுவார்த்தை நடத்த உள்ளதாக தெரிவித்தார்.

மேலும் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் ஸ்பெயின் சுற்றுப்பயணத்தை முடித்துவிட்டு திரும்பியவுடன் கூட்டணி பேச்சுவார்த்தைகள் குறித்த இறுதி முடிவு எடுக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

BEFORE THE HONOURABLE SUB COURT AT AMBATTUR
E.P.No.57 OF 2022
IN
A.R.C.No.120 OF 2015

Margadarsi Chits Private Limited
... Petitioner/Decree Holder
Versus
Mr.K.G.Madhusudhanan
and others
...Respondents/Judgement Debtors

To
Mrs.M.V.Deepa JD4
(W/o.Mr.M.K.Vijayaragavan)
No.18/46, II Street,
Padipudu Nagar, Anna Nagar (w)
Extn., Chennai 600 101.

Please take notice that the above referred execution petition filed by my above client against you for attach and sale of movables, stands posted on 19.02.2024 for your appearance, please appear before the above said court on 19.02.2024 at 10.30 a.m. in the Honourable Sub Court at Ambattur, either personally or through your advocate failing which the case will be decided as exparte, by the above said court.

P.NATARAJA PILLAI
Counsel for Petitioner/
Decree Holder

IN THE HONBLE
V ADDITIONAL CITY CIVIL
COURT JUDGE AT CHENNAI
IA.NO 3 OF2023
AND
IA.NO 2 OF 2023
IN
OS.NO 3932 OF 2019

1.Mr.B. Sudhaker
S/o (Late) V.T.Basker Rao
2.Sheela Chandran
W/o Harish Chandran
---Petitioners/Defendants 4 & 5
-Vs-
Mrs.W.R.Bharathi and Others
---Respondents/Plaintiffs

To,
1.Mrs.W.R.Bharathi
W/o (Late) W.R.Ramesh Babu
Old No.10/2, New No.27/2,
Chari Street, T.Nagar,
Chennai 600017.
(1st Respondent/Plaintiff)

NOTICE

Please take notice that the above-named Petitioners/Defendants 4 & 5 have filed the above petitions before the Hon'ble V ADDITIONAL CITY CIVIL COURT JUDGE at Chennai, and the said case is posted on 16.02.2023 for your appearance. You are hereby required to appear on 16.02.2023 at 10.30am, before the concerned court, either in person or through a counsel and file your objections if any, failing which the matter will be heard and decided in your absence.

KARTHIKEYAN SEKAR
Petitioners/Defendants 4 & 5

துகார் ஹவுசிங் டெவலப்மென்ட்ஸ் லிமிடெட்

பதிய அலுவலகம் : துகார் டவர்ஸ். 7வது மாடி. எண். 34 (123). மார்ஷல்ஸ் ரோடு. எழும்பூர். சென்னை - 600 008. E-mail: housing@dugar.in | Website : www.dhousingl.in.com CIN : L65922TN1992PLC023689

31-12-2023 அன்றுடன் முடிந்த காலாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள்

(ரூபாய் லட்சங்களில்)

வ. எண்	விவரங்கள்	முடிந்த காலாண்டு			முடிந்த ஒன்பது மாதங்கள்		முடிந்த ஆண்டு
		31.12.2023	30.09.2023	31.12.2022	31.12.2023	31.12.2022	31.03.2023
		(தணிக்காதது)	(தணிக்காதது)	(தணிக்காதது)	(தணிக்காதது)	(தணிக்காதது)	(தணிக்காதது)
1.	செயல்பாடுகளில் இருந்து மொத்த வருமானம் (நிகர்)	-	-	3.5	-	12.89	27.51
2.	நடப்பு காலத்துக்கான நிகர லாபம் / (நஷ்டம்) (வரி, விலக்கு பெற்ற ரகங்கள் மற்றும் / அல்லது சிறப்பு ரகங்களுக்கு முந்தையது)	-4.75	-8.01	-3.94	-19.50	-9.11	0.87
3.	நடப்பு காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) (வரிக்கு முந்தையது மற்றும் விலக்கு பெற்ற ரகங்கள் மற்றும் / அல்லது சிறப்பு ரகங்களுக்கு பிந்தையது)	-4.75	-8.01	-3.94	-19.50	-9.11	0.87
4.	நடப்பு காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) (வரிக்கு பிந்தையது மற்றும் விலக்கு பெற்ற ரகங்கள் மற்றும் / அல்லது சிறப்பு ரகங்களுக்கு பிந்தையது)	-4.75	-8.01	-3.94	-19.50	-9.11	0.87
5.	நடப்பு காலத்திற்கான மொத்தம் விரிவான வருவாய் (நடப்பு காலத்திற்கான லாபம் / (நஷ்டம்) (வரிக்கு பிந்தையது) மற்றும் இதர விரிவான வருவாய் (வரிக்கு பிந்தையது)	-4.75	-8.01	-3.94	-19.50	-9.11	0.87
6.	சமபங்கு மூலதனம்	30.00	30.00	30.00	30.00	30.00	30.00
7.	பங்கு ஒன்றின் வருவாய் (சிறப்பு ரகங்களுக்கு முந்தையது) (தலா ரூ.10/- தொடர்சியான மற்றும் தொடர்சி இல்லாத செயல்பாடுகளுக்கானது	-0.16	-0.27	-0.13	-0.65	.0.30	0.03

குறிப்பு : 1. மேற்கூறிய முடிவுகள் தணிக்கைக் குழுவால் மதிப்பாய்வு செய்யப்பட்டு அதன் கூட்டத்தில் நடைபெற்ற நிறுவனத்தின் இயக்குனர்கள் குழுவால் பிப்ரவரி 2, 2024 அன்று ஒப்புதல் பெறப்பட்டது.
2. இந்த அறிக்கை நிறுவனங்கள் (இந்திய கணக்கியல் தரநிலைகள்) விதிகள் 2015 ("Ind AS") இன் படி தயாரிக்கப்பட்டது நிறுவனங்கள் சட்டம் 2013 இன் பிரிவு 133 மற்றும் பிற அங்கீகரிக்கப்பட்ட கணக்கியல் நடைமுறைகள் மற்றும் பொருந்தக்கூடிய கொள்கைகளின் கீழ் பரிந்துரைக்கப்பட்டது.
3. நிறுவனம் பல வணிகப் பிரிவுகளை கொண்டிருக்கவில்லை அதன் விளைவாக பிரிவு வாரியான முடிவுகளைப் புகார் அளிக்க வேண்டிய அவசியம் இல்லை.
4. செப்டம்பர் 30, 2023 மற்றும் டிசம்பர் 31, 2023 ல் முடிவடைந்த மூன்று மாதங்களின் முழு விவரங்கள். நிதியாண்டு தொடர்பான தணிக்கை செய்யப்பட்ட புள்ளிவிவரங்களுக்கு இடையேயான சமநிலை புள்ளி விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.
5. முந்தைய ஆண்டு முந்தைய காலகட்டத்தின் புள்ளி விவரங்கள் மீண்டும் தொகுக்கப்பட்டுள்ளன. தேவை என மறு வகைப்படுத்தப்பட்டது.

இயக்குனர்கள் குழுவின் ஆணைப்படி
துகார் ஹவுசிங் டெவலப்மெண்ட்ஸ் லிமிடெடுக்காக
ஒப்பம்/-
லட்சுமையா தேவராஜலு
நிர்வாக இயக்குனர் - DIN 07704260

இடம் : சென்னை
தேதி : 02-02-2024

ஜகாட் ஹைடெக் டுல்ரூம் லிமிடெட்

பதிவு அலுவலகம் : எண். 131/2. திருநீர்மலை ரோடு. நாகல்கேணி. குரோம்பேட்டை. சென்னை - 600 044
E-mail: info@iykot.com | Website : www.iykot.com CIN : L27209TN1991PLC021330

31-12-2023 அன்றுடன் முடிந்த காலாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள்

(ரூபாய் லட்சங்களில்)

வ எண்	விவரங்கள்	முடிந்த காலாண்டு			முடிந்த ஒன்பது மாதங்கள்		முடிந்த ஆண்டு
		31.12.2023	30.09.2023	31.12.2022	31.12.2023	31.12.2022	31.03.2023
		(தணிக்காதது)	(தணிக்காதது)	(தணிக்காதது)	(தணிக்காதது)	(தணிக்காதது)	(தணிக்காதது)
1.	செயல்பாடுகளில் இருந்து மொத்த வருமானம் (நிகர்)	42.85	23.67	24.62	134.93	217.66	234.71
2.	நடப்பு காலத்துக்கான நிகர லாபம் / (நஷ்டம்) (வரி, விலக்கு பெற்ற ரகங்கள் மற்றும் / அல்லது சிறப்பு ரகங்களுக்கு முந்தையது)	-41.92	-38.69	-39.60	-120.64	-74.93	-113.18
3.	நடப்பு காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) (வரிக்கு முந்தையது மற்றும் விலக்கு பெற்ற ரகங்கள் மற்றும் / அல்லது சிறப்பு ரகங்களுக்கு பிந்தையது)	-41.92	-38.69	-39.60	-120.64	-74.93	-113.18
4.	நடப்பு காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) (வரிக்கு பிந்தையது மற்றும் விலக்கு பெற்ற ரகங்கள் மற்றும் / அல்லது சிறப்பு ரகங்களுக்கு பிந்தையது)	-41.92	-38.69	-39.60	-120.64	-74.93	-113.18
5.	நடப்பு காலத்திற்கான மொத்தம் விரிவான வருவாய் (நடப்பு காலத்திற்கான லாபம் / (நஷ்டம்) (வரிக்கு பிந்தையது) மற்றும் இதர விரிவான வருவாய் (வரிக்கு பிந்தையது)	-41.92	-38.69	-39.60	-120.64	-74.93	-113.18
6.	சமபங்கு மூலதனம்	304.20	304.20	304.20	304.20	304.20	304.20
7.	பங்கு ஒன்றின் வருவாய் (சிறப்பு ரகங்களுக்கு முந்தையது) (தலா ரூ.10/- தொடர்சியான மற்றும் தொடர்சி இல்லாத செயல்பாடுகளுக்கானது	0.00	0.00	0.00	0.00	0.00	0.00
8.	அடிப்படை மற்றும் திட்பம்	(0.68)	(0.64)	(0.65)	(1.98)	(1.23)	(1.86)

குறிப்பு :
1. மேற்குறிப்பிடப்பட்டவைகள் 2015-ம் வருடத்திய SEBI (பொறுப்புகளை பட்டியலிடுதல் மற்றும் தேவைகளை வெளிப்படுத்துதல்) விதிமுறைகளில் 33-வது விதிமுறையில் கீழ், பங்கு வர்த்தக நிறுவனங்களின் தாக்கல் செய்யப்பட்ட நிதிநிலை முடிவுகளின் விரிவான படிவத்தின் சுருக்கமான அறிக்கையாகும்
2. 31-12-2023 அன்றுடன் முடிந்த மூன்று மாதத்திற்கான மேற்காணும் முடிவுகள் தணிக்கையாளர்கள் குழுவால் மறு ஆய்வு செய்யப்பட்டு 02-02-2024 அன்று நடைபெற்ற கம்பெனியின் இயக்குனர்கள் குழு கூட்டத்தில் ஒப்புதல் பெறப்பட்டது.
3. நிறுவனத்தின் சட்டபூர்வ தணிக்கையாளர்கள் மேற்கண்ட காலாண்டு நிதி முடிவுகளின் வரையறுக்கப்பட்ட மதிப்பாய்வை மேற்கொண்டுள்ளனர்.
4. நிறுவனம் ஒரே ஒரு பிரிவில் மட்டும் செயல்படுகிறது.
5. நிறுவன விவகார அமைச்சகத்தின் (MCA) அறிவிப்புக்கு இணங்க, பிப்ரவரி 16. 2016 தேதியிட்ட நிறுவனங்கள் (இந்திய கணக்கியல் தர நிலைகள்) விதிகள் 2015 ("Ind AS") அறிவிப்பின் படியும், ஏப்ரல் 1, 2016 முதல் தேதியுடன் ஏப்ரல் 1, 2017 ("Ind AS") ஐ ஏற்று நிறுவனம் தனது தனியான நிதி அறிக்கைகளை தயாரித்துள்ளது.
6. காலாண்டுக்கான தனிப்பட்ட தணிக்கை செய்யப்படாத மேற்குறிப்பிடப்பட்ட நிதிநிலை முடிவுகளின் சுருக்கத்தின் முழுபதிவத்தையும் பங்கு வர்த்தக நிறுவனத்தின் இணையதளமான (www.bseindia.com) மற்றும் கம்பெனியின் இணையதளமான (www.iykot.com) காணலாம்.

இயக்குனர்கள் குழுவின் ஆணைப்படி
ஜகாட் ஹைடெக் டுல்ரூம் லிமிடெட்டுக்காக
ஒப்பம்/-
லிகிதா துகார்
நிர்வாக இயக்குனர் - DIN : 09758742

இடம் : சென்னை
தேதி : 02-02-2024



Guru Nanak School hosts State-level inter-college, inter-school competitions

Chennai, Feb 4: The grand finale unfolded for the eighth edition of Gurushiksha, an annual state-level intercollegiate and inter-school competition meticulously orchestrated by Guru Nanak College.

The culminating ceremony transpired on Thursday evening within the hallowed confines of the Shahid Baba Deep Singh Auditorium at Amar Das Block, nestled in the collegiate expanse of Velachery.Dr. Sandeep Rai Rathore Commissioner of Police, Government of Tamil Nadu, along with the Guest of Honour, Mrs. Shilpam Kapur Rathore, Founder and Managing Trustee, Aranya Foundation bestowed upon the triumphant contenders a treasury of accolades, comprising a monetary endowment totaling 11 lakhs, along with certificates and trophies.

This ceremonious occasion, the eighth in its illustrious lineage, was convened in homage to commemorate the 555th birth anniversary of Guru Nanak Dev ji.

In her inaugural discourse, Dr. T.K. Avvai Kothai, the erudite principal of Guru Nanak College, expressed profound pride in hosting the esteemed 8th edition of Gurushiksha on 30th & 31st January, 2024.

In the end, Dr. Swati Paliwal, Head, GNCCOI, delivered the Vote of thanks.



Mahalingam's epic novel *Brahma Hathya* launched

Chennai, Feb 4: Set to stand as a testament to the power of storytelling, T. V. Mahalingam's debut novel 'Brahma Hathya', is an Indian mythological fantasy set in the mystic lands of Kedar where the ice clad mountains hold secrets and stories. Published by the award-winning Indian publisher-Westland Books, the 356 pages novel roots through the complexities of violence, heritage, kinship, betrayal, love and bravery against all odds.

With growing interest in mythology and fantasy genre, and yet only a few original stories being explored under this theme, Brahma Hathya narrates a story of a young shepherd boy that unfolds as he meets a mystic Jogi with no past. In the far distant lands, a Brahman makes a bold prophecy of death and destruction. The unbridled power of the majestic Trivikrama, the lord of the kingdom of Vaishali, the mesmerising and mysterious Avanti and the fearsome tribes of the forest come together in a story that combines myth with love, power and mystery. Who is the Jogi? Who is the Brahman? What secrets do the halls of Vaishali hold?

Expressing his sentiments on the book launch, the author's brother T.V. Naarayan, said, "Brahma Hathya is a masterpiece and an ode to all the great fantasy fiction stories from India. T.V. Mahalingam was a journalist and technophile, communications expert, and a cricket enthusiast. An avid reader, he could talk for hours about mythology, science, history. For someone who loved fiction and fantasy, he chose that genre for his first novel on Indian mythology and fantasy."

Kavitha Maanas performs with poise, grace



Kavitha Maanas presented a bharatanatyam dance recital under the auspices of Sri Parthasarathy Swami Sabha for their annual Bharat Nritya Utsav on January 23rd, 2024, aaaaaaaaaaat R.K. Swmy Hall, Mylapore.

Kavitha Maanas is a disciple of Kalaimamani T.M. Sridevi and grand-disciple of Prof. Sudharani Raghupathy.

The interesting Items presented by her are Thodaya Mangalam , Varnam - Athi moham konden , Padam - chinanchiru kiliye, Padam - Vishamakara Kannan , Thillana - Brindavana Saranga.

Under her Guru's guidance, Kavitha has performed at various Sabhas in Chennai including Anusham Arts Academy, Mylapore Fine Arts, and at multiple festivals across Tamil Nadu including the Natyarpana Maha Shivratri Utsav, Natyanjali Thanjavur, etc.

She began her recital with the thodaya Mangalam, followed by the famous Tanjore quartet varnam 'Athi moham konden'. She then performed 'chinanchiru kiliye', where she showcased the limitless love of a mother for her child. Following that was 'vishamakara Kannan' where she gave us a peek into Little Krishna's hilarious antics. She concluded her performance with a brisk thillana set in Brindavana Saaranga.

Impressive performance by Shwetha Sridhar

Shweta Sridhar performed an impressivel performance, very emotional and moving dance recital at R.K. Swamy Hall, Mylapore, in Prestigious Bharat Nritya Utsav.

The items presented by her are 1. Misra Alarippu with excerpts from the Iyyappan Ashtothram, 2. Varnam - Kolamayil vaahanane , 3. □Padam - durge durge , 4. □Padam - Aasai mugam marandhu poche

Shweta Sridhar , disciple of Kalaimamani T M Sridevi , gave an endearing performance with impressive Abhinaya.

She began her recital with the rendition of the Misra Alarippu interspersed with verses from the Ayyappan Ashtothram. Following that was the central piece, the varnam 'kola mayil vaahanane', where she skillfully depicted the story of Muruga's birth, Parvati presenting him with the 'Vel', and the famous Valli Kalyanam.

The Varnam was followed by a Padam, Durge Durge. Shweta concluded her performance with 'Aasai Mugam' , a well-known work of Subramania Bharathiyar , which resonated well with the audience.





Tamil Maanila Congress President G.K. Vasan, MP, chaired the office bearers consultative meet at T Nagar Sri Padmavathi Venkateswara Mahal. Former MLA Vidiyal Sekar, V.P. Jawahar Babu, Thiruvenkadam, Sakthi Vadivel, Headquarters Secretary G.R. Venkatesh, Rajam MP Natham Yough wing president Yuvaraja and others attended the meeting.

PUBLIC NOTICE

Under the instruction from My client Vasantha Parthasarathy w/o. Parthasarathy (late), residing at No.32/22, H.L. Colony, 1st Main Road, Pammal, Chennai-600 075, is legal absolute owner land comprised survey no. 24/2, Pammal Village, Pallavaram Taluk, Kancheepuram District, now Chengalpet district and measuring an extent of 2.150 grounds land and Plot No.C27, along with my client Vasantha Parthasarathy w/o Parthasarathy (late) as Owner of the land as Mother Document (Sale Deed) No. 2299/1971 dated at 16.04.1971 in Pallavaram SRO, my client state that lost the original Mother document (Sale Deed) respect the above said property on the way of Xerox shop on 02.01.2024 at about 10.00 am near Pammal SRO Opposite Xerox shop. Anyone coming across the document may please send it to my client address or to my address given below. Any encumbrance created by anyone based on the missing document will not be binding my client.

B. VAIRAMUTHU, B.Com., B.L..
ADVOCATE
Advocate and Commissioner of Oaths
No. 27, Thiruneermalai Main Road,
L.I.C.Colony pammal, Chennai-600075.
(opposite to S. S. Builders)
Cell.7904483913

PUBLIC NOTICE

My Client Mrs. Tmt. s. KALYANI, W/o. Mr. PL. SUPPIAH, residing at Old No.14, New No. 35, West Road, West CIT Nagar, Chennai - 600 035 hereby inform that she is the absolute owner of the property Door Old No. 14, New No. 35, West Road, West CIT Nagar, Chennai - 600 035, Plot No.300 GOVT. FARM Old. No. R.S. No. 4/2A Part, T. S.28 Block No. 17, Guindy Taluk Chennai. District land extent 1 Ground 2111 Sq. together with the Building and my Client inform that following title deeds relating to the said property was lost by her on 19.01.2024 near her house while going for taking Xerox Copy.

DETAILS OF DOCUMENTS LOST

1. Original sale deed dated 08.08.1977 executed by Tamilnadu Housing Board in favour Mr. V. Ganesan Doc. No. 311/1977 in Book I at RO Madras South Jt.I.
2. Original sale deed dated 19.02.1987 executed by V. Ganesan in favour of Tmt. S. Kalyani registered as Document No. 606/1987 in Book I District Registrar Madras South Jt. I.

My Client also inform that the said original title deeds are not encumbered in any way. Parties having any claim or objection on this notice may contact the undersigned within 15 days from this notice.

S. Ambalavanan,
M.A., B.I., P.G. Dip. In IR & PM
Advocate,
Old No. 5/1, New No. 9/1, Ballah Avenue,
Luz, Mylapore, Chennai – 600 004.
Cell: 9841035799.

PUBLIC NOTICE

My Client Mrs.Vijayalakshmi Sounderarajan, W/o. Mr.C.P.Sounderarajan is the absolute owner in possession of the property being Flat No.S-3, Durga Apartments, Ganeshpuri Annexe, Pudupakkam–603103, Tamil Nadu and comprised in 284/4, Pudupakkam (Sathankuppam) Village, Thiruporur Taluk, Kancheepuram District.

My Client has misplaced the Original Title Document being the Sale Deed No.7939/2011 dated 25.08.2011 executed in her favour by Mr.R.C.Joshua and registered Office Thiruporur in respect of the said property.

My Client or her prodecessors in title have not mortgaged or otherwise encumbered the said property with any Bank/s or Financial Institution/s or Private Financiers by depositing the said document.

I have also perused the Encumbrance Certificate of the said property which dose not reflect any encumbrances over the said property.

Any person who has physical Possession of the said Original Title Deed Shall not get any right or title over the said property and shall return the same to my Client either directly or through me.

If no contesting claims are made within 15 day's from the date of Publication of this Notice it will be presumed that there are no contesting claims in respect of the said property from anybody.

P.B.SAMPATH KUMAR, Advocate
New No.10, North Boag Road, First Street, T.Nagar,
Chennai–600017, Cell:93810 17455

PUBLIC NOTICE

My clients, 1.Mr. C. D. RAJKUMAR, 2. Mr. C. D. BALAKRISHNAN both Sons of Late Dhanakotti Pillai, residing at Old No. 12, New No. 26, Thiru. Vi. Ka. Nagar, Royapettah, Chennai – 600014,had Lost the following Original Documents in their above said house during cleaning process in Pongal Festival January, 2024 relating to the property situated at Somangalam Village, Kundrathur Taluk formerly Sriperumbudur Taluk, Kancheepuram District, all are documents registered before of the Sub-Registrar, Sriperumbudur and were not traceable.

1.Settlement Deed, Dated 30.08.1961, Document No. 2917/1961, SRO Sriperumbudur, Executed By Nagammal to and infavour of Aadhilakshmi Ammal, Survey No. 11/4A - 31 Cents.

2.Settlement Deed, Dated 20.04.1967, Document No. 914/1967, SRO Sriperumbudur, Executed By Kanniyappa Naicker to and infavour of Poongavannammal, Survey No. 11/4B - 32 Cents.

3.Sale Deed, Dated 02.10.1974, Document No. 2041/1972, SRO Sriperumbudur, Executed By Poongavannammal to and infavour of Dhanakotti Pillai, Survey No. 11/4B - 32 Cents.

4.Sale Deed, Dated 29.11.1969, Document No. 2413/1969, SRO Sriperumbudur, Executed By Kanniyappa Naicker and others to and infavour of Rukmangathan, Survey No. 11/4C - 31 Cents.

5.Sale Deed, Dated 02.10.1974, Document No. 2940/1974, SRO Sriperumbudur, Executed By Nataraja Mudaliar to and infavour of Dhanakotti Pillai, Survey No. 11/4D - 32 Cents.

6.Sale Deed, Dated 02.09.1970, Document No. 2157/1970, SRO Sriperumbudur, Executed By Nataraja Naicker, Veeraghava Naicker, to and infavour of Rukmangathan, Survey No. 11/4E - 11 Cents.

7.Sale Deed, Dated 16.03.1970, Document No. 550/1970, SRO Sriperumbudur, Executed By Munusamy Naicker, Manicka Naicker, Govindasamy Naicker to and infavour of Rukmangathan, Survey No. 11/5A - 27 Cents, Survey No. 11/5B - 71 Cents.

8.Sale Deed, Dated 22.08.1967, Document No. 1896/1967, SRO Sriperumbudur, Executed By Malliga to and infavour of Rukmangathan, Survey No. 11/6A - 1.28 Acres, Survey No. 11/6B - 1.30 Acres.

9.SALE DEED, Dated 14.05.1979, Document No. 987/1979, Executed By Mr. MANI REDDIAR to and infavour of MR. BALARAMA REDDIAR, Survey No. 12/1B Part - 50 Cents out of 1.50 Acres, SRO Sriperumbudur

10.SALE DEED, Dated, 16.07.1979, Document No. 1711/1979, Executed by Mr. S. BALARAMA REDDIAR to and infavour of DHANAKOTTI PILLAI, Survey No. 12/1B PART - 50 Cents Out of 1.50 Acres, SRO Sriperumbudur.

11.Sale Deed, Dated, 12.09.1988, Document No. 3452/1988, Executed By Mr. Ramamurthy Reddiar, and others, TO AND INFAVOUR OF Mr. Dhanakotti Pillai,Survey No. 12/1B2 - 50 Cents, SRO Sriperumbudur.

Anyone having knowledge of the above mentioned Original Documents whereabouts or possession of the Schedule Property or having any claim to the said property is requested to contact us at the address given below hereby required to intimate to the undersigned within 7days from the date of publication of this notice

I. ANAND, Advocate,
12, Alamara Street, Zamin Royapettai, Beriyamman Nagar,
Chromepet, Chennai - 600044
Mobile: 9444272923

M/s. Brakes India Private Ltd.

மேல்மருவத்தூர் அருகில் உள்ள பிரேக்ஸ் இந்தியா, பொலம்பாக்கம், தொழிற்சாலைக்கு – "தொழிலாளர் நல அதிகாரி (Welfare Officer) தேவை. கல்வித் தகுதி – MA (பொது நிர்வாகம்), MA (சமூகவியல்), MSW, MLM, BLM. வயது – 28 முதல் 40 வரை. மேற்கூறிய தகுதியுள்ளவர்கள் தங்களது கல்விச் சான்றிதழ், பாஸ்போர்ட் போட்டோவுடன் 7 நாட்களுக்குள் விண்ணப்பிக்கவும்.

Cheyyur - Vandavasi Road
Polambakkam - 603309

NATIONAL OXYGEN LIMITED

CIN: L24111TN1974PLC006819
Reg Office: Door No. S-1, Alsa Mall, No.4, (Old No.149) Montieth Road, Egmore, Chennai, Tamil Nadu, India, 600008.
E-Mail: contact@nolgroup.com Website: www.nolgroup.com

CORRIGENDUM TO THE NOTICE OF EGM DATED 20TH FEBRUARY, 2024.

We Draw the attention of all the Members of National Oxygen Limited to the EGM Notice dated 20th February, 2024.

In the above EGM notice, the items relating to the issuance of Equity Shares of the Company on a preferential basis to Saraf Housing Development Private Limited (the Promoter Group) of the Company has change in relevant date as per SEBI regulations 161 which was earlier mentioned as 22.01.2024 now changed to 19.01.2024. Due to change in relevant date, the fair value of shares of the company is Rs.129.99 asper the addendum to the valuation report as against Rs.129.66 as stated in the earlier report. Issue price fixed earlier remains unchanged i.e 130 per share. And the post issue percentage of Saraf Housing Development Private Limited (the Promoter Group) asper regulation 163(fa) will be 9.78% after allotment.

The contents of the EGM Notice except modified by the Addendum to the EGM Notice, shall remain unchanged. All arrangements for the EGM remain unchanged from those previously notified.

This Addendum shall form an integral part of the EGM Notice dated January 29, 2024 circulated to the shareholders of the Company.

This Corrigendum should be read along with the EGM notice. The revised EGM Notice is available on the Company's **website: www.nolgroup.com.**

By Order of the Board
For **NATIONAL OXYGEN LIMITED**
Sd/-
MR. RAJESH KUMAR SARAF
Managing Director - DIN: 00007353

Date : 03-02-2024
Place : Chennai

NAME CHANGE

I, LEYAKATH ALI AMEER ALI, S/o, AMEER ALI, Date of Birth: 16.01.1979, residing at 5/1A, 1st Erattai Kinatru Street, Bhuvanagiri taluk, Parangipettai, Cuddalore Dt– 608502 shall henceforth be known as **LIYAKATH ALI AMEER ALI**.

LEYAKATH ALI AMEER ALI

NAME CHANGE

I, BALAGURU HARIDOSS D/O. HARIDOSS, Date of Birth: 20.01.1984, Residing at No.5, DEVI KARUMARI AMMAN NAGAR 5TH STREET, Velachery, Chenani – 600042.Shallhenceforthbeknown as **MARGARET MAGIZHINI HARIDOSS**

BALAGURU HARIDOSS

NAME CHANGE

I, RUKMINI SHANMUGAM, W/O.Thiru.S.Srinivasan, Date of Birth: 08.05.1975, Native District:Bangalore), Residing at No. 47/12, Naidu Street, Kotturpuram, Chennai – 600085. Shall henceforth be known as **RUKMANI SRINIVASAN**

RUKMINI SHANMUGAM

NAME CHANGE

I, Vaippar Balasubramaniam Ayyachamy, S/O. Vaippar Ayyachamy Balasubramaniam, Date of Birth: 31.10.1985, Residing at Flat 4 4 KANDL, 4th Floor, Block 1, Poomalai Lakshitha Apt, Vengambakkam Main Road, Mappedu, Chennai – 600 126. Shall hence forth be known as **BALASUBBHRAMANIYAM AYYASWAAMI**

Vaippar Balasubramaniam Ayyachamy

NAME CHANGE

I, Old Given name: Badmanaban Old Surname: Annamalai, Date of Birth:08.05.1965, residing at No.29, Kuberan Nagar, 7th Street Extn, Madipakkam, Chennai –600 091. shall hence forth be known as **New Given Name: PADMANABAN New Sur name: ANNAMALAI**

Old Given name: Badmanaban
Old Surname: Annamalai

DUGAR HOUSING DEVELOPMENTS LIMITED

Regd. Office: Dugar Towers, 7th Floor, 34 (123) Marshalls Road Egmore Chennai - 600 008.
Website : www.dhousingl.in.com Email : housing@dugar.in
CIN : L65922TN1992PLC023689
STATEMENT OF STANDALONE UNAUDITED RESULTS FOR THE QUARTER ENDED 31-12-2023

Rs. in Lakhs

Sl. No	Particulars	Quarter Ended			Nine Months Ended		Year Ended
		31.12.2023 (Unaudited)	30.09.2023 (Unaudited)	31.12.2022 (Unaudited)	31.12.2023 (Unaudited)	31.12.2022 (Unaudited)	31.03.2023 (Audited)
1.	Total Income from operations (net)	-	-	3.5	-	12.89	27.51
2.	Net Profit / (Loss) for the period (before Tax, Exceptional and / or Extraordinary Items)	-4.75	-8.01	-3.94	-19.50	-9.11	0.87
3.	Net Profit / (Loss) for the period (before Tax and after Exceptional and / or Extraordinary Items)	-4.75	-8.01	-3.94	-19.50	-9.11	0.87
4.	Net Profit / (Loss) for the period (after Tax and after Exceptional and / or Extraordinary Items)	-4.75	-8.01	-3.94	-19.50	-9.11	0.87
5.	Total Comprehensive Income for the period [Comprising Profit / (Loss) for the period (after tax) and Other Comprehensive Income (after tax)]	-4.75	-8.01	-3.94	-19.50	-9.11	0.87
6.	Equity Share Capital	30.00	30.00	30.00	30.00	30.00	30.00
7.	Earnings per Share (before extraordinary items (of Rs.10/- each) for continued and discontinued operations	-0.16	-0.27	-0.13	-0.65	.0.30	0.03

Notes: 1. The above results have been reviewed by the audit committee and approved by the board of directors of the company at its meeting held on 2nd February, 2024.
2. This Statement has been prepared in accordance with the Companies(Indian Accounting Standards) Rules, 2015 (Ind AS), Prescribed under Section 133 of the Companies Act, 2013, and other recognised accounting practices and policies to the extent applicable.
3. The company does not have multiple business segment and consequently, requirement of reporting of segment wise results does not arise.
4. The figures for three months ended 30th Sep 2023 and 31st December 2023 are balancing figure between audited figures in respect of full financial year.
5. The figures in the previous year / Previous period have been regrouped and reclassified as necessary.

By Order of the Board
For **DUGAR HOUSING DEVELOPMENTS LIMITED**
Sd/-
Lakshmaiah Devarajulu
Managing Director
DIN: 07704260

Place : Chennai
Date : 02.02.2024

IYKOT HITECH TOOLROOM LIMITED

Regd. Office: No. 131/2 Thiruneermalai Road, Nagalkeni, Chrompet, Chennai- 600044.
Email: info@iykot.com | Website: www.iykot.com
CIN: L27209TN1991PLC021330
Extract of Statement of Unaudited Financial Results for the Quarter Ended 31.12.2023

Rs. in Lakhs

Sl. No	Particulars	Quarter Ended			Nine Months Ended		Year Ended
		31.12.2023 (Unaudited)	30.09.2023 (Unaudited)	31.12.2022 (Unaudited)	31.12.2023 (Unaudited)	31.12.2022 (Unaudited)	31.03.2023 (Audited)
1.	Total Income from operations (net)	42.85	23.67	24.62	134.93	217.66	234.71
2.	Net Profit / (Loss) for the period (before Tax, Exceptional and / or Extraordinary Items)	-41.92	-38.69	-39.60	-120.64	-74.93	-113.18
3.	Net Profit / (Loss) for the period (before Tax and after Exceptional and / or Extraordinary Items)	-41.92	-38.69	-39.60	-120.64	-74.93	-113.18
4.	Net Profit / (Loss) for the period (after Tax and after Exceptional and / or Extraordinary Items)	-41.92	-38.69	-39.60	-120.64	-74.93	-113.18
5.	Total Comprehensive Income for the period [Comprising Profit / (Loss) for the period (after tax) and Other Comprehensive Income (after tax)]	-41.92	-38.69	-39.60	-120.64	-74.93	-113.18
6.	Equity Share Capital	304.20	304.20	304.20	304.20	304.20	304.20
7.	Earnings per Share (before extraordinary items (of Rs.5/- each) for continued and discontinued operations	0.00	0.00	0.00	0.00	0.00	0.00
8.	Basic and Diluted	(0.68)	(0.64)	(0.65)	(1.98)	(1.23)	(1.86)

Note :
1. The above is an extract of the detailed format of the Financial Results filed with the Stock Exchange under Regulation 33 of the SEBI (Listing and Other Disclosure Requirements) Regulations, 2015.
2 The above results of the three months ended 31st December, 2023 have been reviewed by the Audit Committee and approved by the Board of Directors of the Company at their meeting held on 2nd February ,2024
3 The Statutory Auditors of the company have carried out the Limited Review of the above quarterly financial results.
4 The Company operates only in one segment.
5 In compliance with the Ministry of Corporate Affairs (MCA) Notification dated 16th February, 2016, announcing the Companies (Indian Accounting Standards), Rules, 2015 (Ind AS), the Company has prepared its Standalone Financial Statements adopting Ind AS with effect from 1st April, 2017 with transition date of 1st April,2016.
6 The full format of the Quarterly Standalone Unaudited above extract of Financial Results are available on the website of the Stock Exchange (www.bseindia.com) and on the Company's website (www.iykot.com).

By Order of the Board
For **IYKOT HITECH TOOLROOM LIMITED**
Sd/-
LIKHITTA DUGAR
Executive Director
DIN: 09768742

Place : Chennai
Date : 02.02.2024